# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● அக்டோபர் 7, 2017 Weekly E-paper ● October 7, 2017


# நோஞ்சான்களின் பாஞ்சாலி சபதம்!

● சுப.வீரபாண்டியன்



திருச்சியில் ஒரு மாநாடு கூட்டி, ரஜினிகாந்த்தின் அரசியல் வரவுக்கு வரவேற்பு வளையம் வைத்தார் தமிழருவி மணியன். அன்று அவர் பேசிய பேச்சு முழுவதையும் (1 மணி 12 நிமிடங்கள்) வலைத்தளத்தில் பொறுமையாகக் கேட்ட பிறகு, அதுகுறித்து எழுத வேண்டும் என்று தோன்றியது. அவருக்கெலாம் ஏன் இவ்வளவு முதன்மை கொடுக்கின்றீர்கள் என்று சிலருக்குக் கேட்கத் தோன்றலாம். மணியன் என்னும் தனி மனிதரை எண்ணியோ, ரஜினிகாந்த் என்னும் புகழ் பெற்ற கலைஞரை எண்ணியோ இந்தக் கட்டுரையை நான் எழுதவில்லை. மணியன் அவர்களின் பேச்சில் நான் உணர்ந்த, மறைவான உள்நோக்கம் கொண்ட, நுண்ணரசியலை எண்ணியே எழுதுகின்றேன்.


அவர் உரையை மூன்றாகப் பகுத்துக் கொள்ளலாம். ஒன்று, ரஜினிகாந்தின் நேர்மை, அறிவுத் திறன் பற்றியது. இரண்டாவது, கடந்த 50 ஆண்டுகளாக மணியனின் நெஞ்சில் கிடக்கும் சபதம் பற்றியது. மூன்றாவது, வழக்கம்போல், தன்னைப் பற்றித் தானே, நேர்மையானவன் என்றும், அறிவாளி என்றும் அவர் பெருமையாகக் கூறிக் கொண்டது!

ரஜினிகாந்த் ஒரு நல்ல நடிகர். நாம் பழகியதில்லை என்றாலும், நல்ல குணங்களும் உண்டு என்று கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் அரசியல் என்பது இவைகளை எல்லாம் தாண்டியது. அவரைப் பாராட்ட விரும்பும் மணியன், அளவு கடந்து அதனைச் செய்திருக்கிறார். ஓர் இடத்தில், திருவள்ளுவருக்கு மேலான அறிவாளி என்பதுபோல் குறிப்பிடுகின்றார். "வள்ளுவர் கூட ஒன்றே முக்கால் அடியில் கூறினார், சூப்பர் ஸ்டார் ரஜினியோ ஒரே வரியில், 'சிஸ்டம் கெட்டுவிட்டது' என்று கூறிவிட்டார். அது அவரை என் நெஞ்சுக்கு நெருக்கமாக்கி விட்டது" என்கிறார். உண்மையிலேயே சிறந்த படிப்பாளியான மணியனுக்கு, **ஒருவரை அளவு கடந்தும், தகுதிக்கு மீறியும் பாராட்டுவது அநாகரிகம் என்பது புரிந்திருக்க வேண்டும்.** சிஸ்டம் கெட்டுவிட்டது என்று ஏற்கனவே பலர் கூறியுள்ளனர். மேலும் அந்த வரி அப்படியொன்றும் தத்துவச் செறிவு மிக்கதில்லை.

ரஜினி மூன்று நோக்கங்களோடு வருவதாக மணியன் சொல்கிறார். நதிகளை இணைப்பது, ஊழலற்ற ஆட்சி தருவது, வெளிப்படையான நிர்வாகத்தைக் கொடுப்பது என்பவை அவர் நோக்கங்கள் என்கிறார். நல்லது, இவற்றை இதுவரையில் சொல்லாதவர்கள் யார்? செய்தவர்கள் யார்? ரஜினியாவது ஆள் வைத்துச் சொல்கிறார், மோடி நேரடியாகவே சொன்னாரே! இவையெல்லாம் மிக மேலோட்டமானவை என்பதும், பொத்தாம் பொதுவானவை என்பதும் அனைவருக்கும் தெரியும்!

அவர் பேச்சின் இரண்டாவது பகுதிதான் இன்றியமையாதது. ஒரு மணி நேரப் பேச்சின் ஒட்டுமொத்தச் சாரம், திமுக, ஆட்சிக்கு வந்துவிடாமல் தடுத்துவிட வேண்டும் என்பதுதான். 'இரண்டு திராவிடக் கட்சிகளையும் வங்கக் கடலில் தூக்கி எறிய வேண்டும் என்கிறார். அதிமுகவைத் திமுகவுடன் சேர்த்துச் சேர்த்துச் சொல்வது, நீண்ட நாள்களாக இங்கு நடந்து வரும் ஏமாற்று வேலை. பெயருக்கு அவர்களையும் சேர்த்துக் கொள்வது. உண்மை நோக்கம், திமுகவை எதிர்ப்பதுதான். பிறகு ஏன் அதிமுகவைத் தாக்க வேண்டும்? அப்படிச் செய்தால்தானே நடுநிலை வேடம் பொருந்தும்!

அவரே தன் பேச்சில் சொல்கிறார், "இனி அதிமுக வெற்றிபெற முடியாது. இப்போது தேர்தல் வைத்தால், ஸ்டாலின்



வெற்றிபெற்று முதலமைச்சராகி விடுவார்."

மேலும் சொல்கிறார் "நான் யார் யாரையோ முன்னிறுத்தி முயற்சி செய்தேன். வைகோவை முதலமைச்சராக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அவருக்கு 5 சதவீத வாக்குகள் கூட இல்லை. பிறகு பல கட்சிகளை ஒருங்கிணைத்தேன். அவர்கள் எல்லோரும் சேர்ந்து 10 சதவீதம் வாக்குகளைக் கூடப் பெறவில்லை. காலம் கடைசியாக எனக்குக் காட்டிய கருணைதான் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த். இனிமேல், ஸ்டாலின் முதலமைச்சர் பதவிக்கு வர முடியாது. வெறும் இலவு காத்த கிளியாகத்தான் இறுதிவரை இருக்க வேண்டும்."

ரஜினியன்று, யார் வந்தாலும், தளபதி ஸ்டாலின் முதல்வர் ஆவதை இனி யாராலும் தடுக்க முடியாது என்பது ஒருபுறமிருக்கட்டும், மணியனுக்கு ஏன், திமுக மீதும், தளபதி மீதும் இவ்வளவு கோபம்? சும்மா இருந்தவரை அழைத்துத் திட்டக்குழு உறுப்பினர் ஆக்கினாரே தலைவர் கலைஞர், அதற்காகவா? ஓய்வு ஒழிவின்றித் தளபதி நாளும் உழைக்கின்றாரே, அதற்காகவா?

திராவிடம் என்பது ஆரியத்தின் எதிர்ச் சொல். ஆரியப் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், வருண–சாதி ஏற்றத்தாழ்விற்கும் எதிராகப் பாடுபட்ட இயக்கம் திராவிட இயக்கம். ஆதலால், அவர்கள், திமுகவிற்கு எதிராக இருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இப்போது, திராவிட இயக்க எதிர்ப்பாளர்கள் பல்வேறு முகமூடிகளோடு வருகின்றனர். அவற்றுள் ஒன்றுதான், மணியனின் புதிய ரஜினி முகமூடி!

அவர் தன் உரையில், திமுக, அதிமுக இரண்டையும் சமப்படுத்த அரும்பாடு படுகின்றார். இன்றைய அமைச்சர்களின் ஊழல், சேகர் ரெட்டியிடம் கைப்பற்றப்பட்ட பணம், தங்கம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, 2ஜி ஊழல் என்று சொல்லி முடிக்கிறார். 1,76,000 கோடி என்று, குற்றப்பத்திரிகையிலோ, வேறு எங்குமோ இல்லாத அந்தத் தொகையைக் குறிப்பிட்டு, திமுகவின் மீது ஒரு வெறுப்பைக் கிளப்புகின்றார். "திராவிடக் கட்சிகளை அகற்றுவது (அதாவது திமுகவை அகற்றுவது) தன் நெஞ்சில் 50 ஆண்டுகளாகக் கிடக்கும் குறிக்கோள், பாஞ்சாலி சபதம் போன்றது இது என்கிறார். பாவம் பாஞ்சாலி!

இறுதியாக, ரஜினியிடம் ஒரு கேள்வியையும், மணியனிடம் மூன்று கேள்விகளையும் முன் வைக்க வேண்டியுள்ளது.

மூன்று நாள்களுக்கு முன்பு கூட ரஜினியைப் பார்த்துவிட்டு வந்துதான் நான் பேசுகிறேன். அவர் அரசியலுக்கு வருவது உறுதி என்பதை இந்த மேடையில் பிரகடனம் செய்கிறேன் என்றார் மணியன். அவ்வளவு தூரம் உறுதியாகிவிட்ட ஒரு செய்தியை, ரஜினி அவர்களே, நீங்களே வெளியிடுவதுதானே முறை? அல்லது மணியன் கூறுவது உண்மைக்கு மாறானது என்றால், அதனை மறுப்பதுதானே முறை? இரண்டும் இல்லாமல் நீங்கள் காக்கும் மௌனத்திற்கு என்ன பெயர்? அது நல்ல மௌனமா, கள்ள மௌனமா, சொல்லுங்கள் ரஜினி!

மணியனிடம் கேட்க ஆயிரம் கேள்விகள் இருந்தாலும், சுருக்கமாகச் சில கேள்விகளை மட்டும் முன்வைக்கின்றேன்.


1. வாடகை வீட்டில், புத்தகங்களுக்கு நடுவில் குடியிருப்பதாக, உங்கள் பேச்சில் உங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். நல்லது, உங்கள் எளிமையை, அறிவைப் பாராட்டுகின்றோம். ஆனால் அவ்வளவு எளிய மனிதரான உங்களால், இவ்வளவு பெரிய மாநாட்டைத் திருச்சியில் எப்படிக் கூட்ட முடிந்தது? பெரிய கட்சிகளுக்கு இணையாக அவ்வளவு பெரிய மேடை, ஆடம்பரமான அலங்காரங்கள் எல்லாவற்றிற்கும் பணம் எங்கிருந்து வந்தது? காந்திய மக்கள் இயக்கத் தொண்டர்கள் ஒவ்வொரு செப்புக் காசாகச் சேர்த்துத் தந்தார்கள் என்று சொல்லிவிடாதீர்கள். நம்பும்படியாக இருக்காது. வேறு ஏதேனும் நம்பும்படியாகச் சொல்லுங்கள்.

2. திமுக, அதிமுக பற்றி அவ்வளவு நேரம் பேசினீர்களே, மத்தியில் ஆளும் பாஜக ஆட்சி பற்றிச் சில வரிகள் பேசுவதற்கு கூட உங்களுக்கு நேரம் இல்லாமல் போய்விட்டதே ஏன்?

3. சிஸ்டம் கெட்டுப்போனதற்கு லஞ்சம், ஊழல் மட்டும்தான் காரணமா, கறுப்புப்பணம் போன்றவைகளும் காரணமா என்பதை ரஜினி அவர்களிடம் கேட்க நேரம் இருந்ததா?

திமுகவை வீழ்த்தியே தீர வேண்டும் என்று காமராஜர், ராஜாஜி போன்ற பெருந்தலைவர்களே முயன்று பார்த்தும் வெற்றி கிட்டவில்லை. நோஞ்சான்களின் பாஞ் சாலி சபதத்திற்கெல்லாம், திமுக தொண்டன் அஞ்சுவான் என்றா நினைக்கின்றீர்கள்?●

# டெங்கு அபாயம்



**நோ**யற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள்.

இங்கு நோயுற்ற வாழ்வோடு, குறைவுற்ற நாடாக மாறிக்கொண்டிருக்கிறது தமிழகம்.

டெங்கு என்ற காய்ச்சல் மாநிலத்தில் பரவலாகவும், வேகமாகவும் பரவிக்கொண்டு வருகிறது.

மாநிலச் சுகாதாரத் துறைச் செயலாளர் சொல்கிறார். 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இந்த டெங்கு காய்ச்சலால் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள் என்று.

ஏறத்தாழ இதுவரை 400க்கும் மேற்பட்டவர்கள் இக்கொடிய காய்ச்சலால் உயிரிழந்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகளைப் பார்க்கிறோம்.

தூர்வாராத சாக்கடைகள், குப்பை மேடுகள், கொட்டிக் கிடக்கும் கழிவுப் பொருள்கள் எனப் பல்வேறு இடங்களில் சுகாதாரம் சீர்கெட்டு இருப்பது டெங்கு கொசுக்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றது.

தமிழக அரசு சுகாதாரப் பணியை சரியாகச் செய்யாமல் கொசு ஒழிப்பு வேலையை முறையாகச் செய்யாமல், டெங்கு காய்ச்சல் நடவடிக்கையை வார்த்தை சாலங்களால் பூசி மெழுகிக் கொண்டிருந்தால் நாடு நாடாக இருக்காது.

1,200 வீடுகளில் டெங்கு கொசுக்களின் புழுக்கள் இருப்பதாகச் சொல்லி அந்த வீடுகளுக்கு 'நோட்டீஸ்' அனுப்பும் வேலையை விட்டுவிட்டு, முதலில் டெங்குவைக் கட்டுப்படுத்தப் போர்க்கால நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும்.



Tweet

SubaVeerapandian
@Suba_Vee

கலைஞர் பெயரை மறைக்கலாம். தாஜ்மகால் பெயரை நீக்கலாம். வரலாற்றுப் புத்தகங்களை மாற்றலாம். ஆனாலும் வரலாற்றை மாற்ற முடியாது! #TajMahal #DMK

4:31 PM · 03 Oct 17

View Tweet activity

291 Retweets 886 Likes

Tweet your reply

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**




## திருப்பூர்



**03.10.2017** அன்று திருப்பூர், பாப்பநாயக்கன்பாளையத்தில், தி.இ.த. பேரவையின் புதிய கிளைத் தொடங்கப்பட்டது. கிளை அமைப்பாளர் முருகானந்தம் தலைமையில், பெண்கள், குழந்தைகள் உள்படப் பலரும் திரளாகக் கலந்துகொண்டனர். தி.மு.க. மாவட்டச் செயலாளர் செல்வராஜ், சுபவீ, சிற்பிசெல்வராஜ், இளங்கோ, அனுப்பட்டி பிரகாஷ், மேங்கோ பழனிச்சாமி ஆகியோர் உடன் உள்ளனர்.

## நெய்வேலி இலக்கிய விழா



**30.09.2017**இல், நெய்வேலி இலக்கியச் சங்கமம் சார்பில் நடைபெற்ற விழாவில், சுபவீ உரையாற்றினார். மேடையில் சட்டமன்ற உறுப்பினர் சபா இராசேந்திரன், தொ.மு.ச. நகரச் செயலாளர் சுகுமார், சங்கமம் நிறுவனர் நடராசர் உள்ளிட்டோர் அமர்ந்துள்ளனர்.

## நெய்வேலி – முப்பெரும்விழா



**01.10.2017**இல், தி.மு.கழக சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தி.மு.க. மாவட்டச் செயலாளர் கனேசன், சட்டமன்ற சபா இராஜேந்திரன், தி.மு.க. நகரச் செயலாளர் பக்கிரிசாமி, தொ.மு.ச. தலைவர் வீர.இராமசந்திரன், செயலாளர் சுகுமார் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் தோழர் சுபவீ நிறைவுரையாற்றினார்.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘ராவ்’ வழியில் ‘லால்’?

**வ**ந்த வேலையை முடித்துக் கொண்டு மும்பை புறப்பட்டு விட்டார் முன்னாள் பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவ்.

அவரின் (ஆளுநர்) வேலையைத் தொடர்வதற்கு தமிழகம் வந்துவிட்டார் அடுத்த ஆளுநராக, பன்வாரிலால் புரோகித்.

ஒரு சிறிய அறிமுகம் -

பன்வாரிலால் புரோகித் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியில் இணைந்து தன் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார்.

இரண்டு முறை காங்கிரஸ் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

ஒரு தடவை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

1991இல் அயோத்தியில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற பிடிப்பில், பா.ஜ.க. சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவினார்.

2003ஆம் ஆண்டு விதர்ப்பா ராஜ்ய கட்சியைத் தொடங்கினார்.

மீண்டும் பா.ஜ.க.வின் ஆதரவாளராகி 2006ஆம் ஆண்டு அசாம் கவர்னராகி, இப்பொழுது தமிழக ஆளுநராக வந்திருக்கிறார்.

மிக முக்கிய செய்தி, அவர் பல்வேறு கட்சிகளில் தாவியவர் மட்டுமல்ல, பா.ஜ.க. - காங்கிரஸ் கட்சிகளில் மாறிமாறி பதவி சுகம் கண்டவர். இவர் தீவிர ஆர்.எஸ்.எஸ். காரர் என்பது குறிக்கத்தக்கது.

தற்போதைய தமிழக அரசியல் சூழலில் டி.டி.வி.தினகரன் அணியின் 18 சட்டமன்ற உறுப்பினர்கள் நீக்கம் -

தகுதி நீக்கம் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்த நீதிமன்றத்தின் தடுப்பாணை -

முதல்வரை, அமைச்சரவையை மாற்ற வேண்டும் என்று முன்னாள் ஆளுநரிடம் தினகரன் கொடுத்த, மனு குறித்த இவரின் நிலை -

அமைச்சரவையில் பெரும்பான்மை இல்லாமை குறித்து எடுக்க வேண்டிய முடிவு -

தமிழக காங்கிரஸ் கட்சி ஆளுநரிடம் கொடுக்க இருக்கும் அமைச்சர்கள் மீதான ஊழல் புகார் பட்டியல் -

தமிழகப் பல்கலைக் கழகங்கழகங்களின் முறைகேடுகள் குறித்த நடவடிக்கைகள், என்று பெரும் சவால்கள் புதிய ஆளுநரை எதிர்க்கொண்டு இருக்கின்றன.

நடுநிலையோடு செயல்படுவார் ஆளுநர் என்று தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட அனைத்து எதிர் கட்சிகளும் நம்புகின்றனர்.

அப்படித்தான் வித்தியாசாகர் செயல்படுவார் என்று நம்பினார்கள், நடந்ததோ வேறு.

தமிழகத்தில் இலைக்குப் பின்னால் இருந்து, பா.ஜ.க.வின் ஆளுமைக்கு மறைமுகக் காரணமாக இருந்தார் முன்னாள் ஆளுநர் என்கிறார்கள் மக்கள்.

ராவ் - ஆர்.எஸ்.எஸ்.காரர். லால் - ஆர்.எஸ்.எஸ்.காரர். இதுதான் உறுத்தலாக இருக்கிறது.

## பேரவைப் பயிலரங்கம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக 8.10.2017 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்குப் பேரவைத் தலைமை அலுவலகத்தில் பயிலரங்கம் நடைபெற உள்ளது. இப்பயிலரங்கில் சமூக நீதி குறித்துப் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் வகுப்பு எடுக்க உள்ளார். பெயர் பதிவு செய்துள்ள பேரவைத் தோழர்கள் மட்டும் தவறாது இப்பயிலரங்கில் கலந்துகொள்ள வேண்டுகிறோம். குறித்த நேரத்தில் வகுப்பு தொடங்கிவிடும்.

**- எட்வின் ராஜ்** (தலைமை நிலையச் செயலாளர்)

# எழுமேடு தந்த எழுச்சி!

● சுபவீ







நாம் எதிர்பார்ப்பது போலவே எல்லாம் நடப்பதில்லை. சில நிகழ்வுகள் நமக்கு அதிர்ச்சி தரும். சில நிகழ்வுகளோ நமக்குப் புதிய எழுச்சியைத் தரும். எழுச்சியை மட்டுமின்றி உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சியையும் எனக்குத் தந்த நிகழ்வு ஒன்று அண்மையில் நடந்தது.

அக்டோபர் 1 ஆம் தேதி காலை 11 மணிக்கு அந்த நிகழ்வு தொடங்கியது. எழுமேடு – பண்ருட்டிக்கு அருகில் உள்ள அண்ணா கிராமம் ஒன்றியத்தில் உள்ளடங்கி உள்ள ஒரு சின்ன கிராமம் அது. ஒரு நூறு இளைஞர்களைச் சந்திக்க வேண்டும் என்ற என் ஆவலை ஏற்று, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கடலூர் மாவட்டச் செயலாளர் முரளியும், திமுக வின் முன்னாள் ஒன்றியச் செயலாளர் பலராமன் அவர்களும் இணைந்து அந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர். பலராமன் ஒரு செயல்வீரர். 100 பேர் கேட்டால் 200க்கும் மேற்பட்ட பெண், ஆண் இளைஞர்களைக் கொண்டுவந்து சேர்த்திருந்தார்.

என்னுடன் தொ.மு.ச.வின் நெய்வேலி நகரச் செயலாளர் சுகுமார், தி.இ.த. பேரவையின் முகிலன், சிதம்பரம் 'சொல் புதிது' நிறுவனர் அருணேஸ்வரன் ஆகியோரும் வந்திருந்தனர்.

இளைஞர்களில் பல்வேறு வயதினரும், பல்வேறு கல்வித் தகுதி உடையவர்களும் கலந்திருந்ததால் எங்கிருந்து தொடங்குவது என்ற குழப்பம் எனக்குள் எழுந்தது.

என்னைத் தெரியுமா, பார்த்திக்கிறீர்களா என்று கேட்டபோது, "தெரியும், தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறோம்" என்று பலரும் விடை கூறினர். அது ஒரு நுழைவுச் சீட்டாக அமைந்தது.

"கடந்த ஓரிரு மாதங்களில் உங்கள் நெஞ்சில் பதிந்து கிடக்கிற பெயர் ஏதேனும் இருக்கிறதா?" என்று கேட்டு உரையாடலைத் தொடங்கினேன். நான் எதிர்பார்க்கவில்லை. பல திசைகளிலிருந்தும் 'அனிதா, அனிதா' என்னும் பெயர் அலைமோதிற்று.

அந்தப் பெயரைப் பற்றிக் கொண்டு அந்த இளைஞர்களிடம் உட்புகுந்தேன். ஏன் அனிதா இறந்தார், நீட் என்றால் என்ன, நீட் தேவையா என்று உரையாடல் விரிந்தது. அடுத்தடுத்த பகுதிகளுக்குள் நானும் அவர்களும் பயணித்தோம்.

தாய் மொழியின் சிறப்பு, ஆதிக்க எதிர்ப்பின் தேவை, கௌரி லங்கேஷ் படுகொலை என்று பல்வேறு செய்திகள் பேசப்பட்டன. அவர்கள் நிறையச் செய்திகளைத் தெரிந்து வைத்திருந்தனர். கிராமத்துப் பிள்ளைகள் என்று எளிமையாக எடைபோட்டு விடக் கூடாது என்பதை அவர்கள் உணர்த்தினர்.

ஒன்றே ஒன்றுதான், சற்று வருத்தமாக இருந்தது. தினமும் நாளேடுகள் படிப்பவர்கள் யார் யார் என்று கேட்டேன். சட்டென்று பிள்ளைகள் மௌனமாகி விட்டனர். நான் மீண்டும் மீண்டும் கேட்ட பிறகு, ஏறத்தாழ 250 இளைஞர்கள் கூடியிருந்த அந்த இடத்தில் இரண்டே இரண்டு கைகள்தாம் மேல் உயர்ந்தன. இருவரும் தினத்தந்தி படிப்பதாகக் கூறினார்கள்.

எந்தச் செய்தித்தாளை வேண்டுமானாலும் படியுங்கள். ஆனால் செய்தித்தாள் படிப்பது என்பதைக் கட்டாயமாக ஒரு பழக்கமாக்கிக்கொள்ளுங்கள் என்று அன்புடன் வேண்டினேன். பள்ளிகளுக்கு வெளியிலும் பாடங்கள் விரிந்து கிடப்பதை விளக்கினேன்.

நேரம் ஓடியது தெரியாமல் இரண்டு மணி நேரம் கடந்து விட்டது. இனி வினாக்களை நீங்கள் கேளுங்கள் என்றேன். பல்வேறு வினாக்கள் எழுந்தன. இட ஒதுக்கீடு ஏன் வேண்டும் என்று ஓர் இளைஞர் கேட்டார். அவர் இடஒதுக்கீட்டால் பயன் பெற்றவர் என்பது ஒரு வேடிக்கையான முரண். ஒரே அமர்வில் எல்லாவற்றையும் விளக்கி விட முடியாது என்றாலும் இயன்றவரையில் எடுத்துச் சொன்னேன்.

ஒரு மாணவர் சொன்னார், "அய்யா, நீங்கள் பேசத் தொடங்கிய சிறிது நேரத்தில், நான் என் கடிகாரத்தைக் கழற்றிப் பையில் போட்டுக் கொண்டேன்" என்றார். எனக்குப் புரியவில்லை. ஏன் என்று கேட்டேன். "என்னிடம் ஒரு கெட்ட பழக்கம் உண்டு. பள்ளியிலோ, பொது இடத்திலோ யாரேனும் பேசத் தொடங்கினால், கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். இவர் எப்போது முடிப்பார் என்பதிலேயே என் கவனம் இருக்கும். இன்று உங்கள் பேச்சு எனக்கு மிகவும் பிடித்தது. கடிகாரம் வேண்டாம் என்று கழற்றி விட்டேன்" என்றார்.

எனக்கே வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. பிள்ளைகள் பலரும் 'நீங்கள் பேசியது பிடிக்கிறது' என்றனர். இனி நாங்கள் செய்தித்தாள் படிப்போம் என்றனர். "மீண்டும் வருவீர்களா?" என்று கேட்டனர். இறுதியாக, "என் பேச்சு உங்களுக்கு எதனால் பிடிக்கிறது?" என்று கேட்டேன். ஒரு மாணவி சொன்ன விடை என்னை நெகிழ வைத்தது. "நீங்க உண்மை பேசுறீங்கன்னு எங்களுக்குத் தோணுது. அதனால பிடிக்குது" என்றார்.

போதும், இது போதும், இதனை விட இனி நான் என்ன சொத்துச் சேர்த்துவிடப் போகிறேன் என்ற எண்ணம் எழுந்தது.

மீண்டும் உங்களை வந்து சந்திப்போம் என்ற உறுதி மொழியோடு அனைவரும் அங்கிருந்து விடைபெற்றோம்!

அந்த நாளை இனி என்னால் எந்நாளும் மறக்க முடியாது.

●

# பேராசிரியர் கா.சு.பிள்ளை

● எழில்.இளங்கோவன்

## மறக்க முடியுமா?

ஓலைச் சுவடிகளுள் இருந்த தமிழ் இலக்கியங்களை அச்சுக்குக் கொண்டுவந்த தமிழ் அறிஞர்களுள் ஒருவரான உ.வே.சாமிநாதரின் மாணவர் –

திராவிட இயக்கத் தலைவர்களான நாவலர் இரா.நெடுஞ்செழியன், பேராசிரியர் க.அன்பழகன் ஆகியோரின் ஆசிரியர் –

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்ற நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சர்.பிட்டி.தியாகராயர் அவர்களின் பரிந்துரையால், சென்னை சட்டக் கல்லூரியில் பேராசிரியராக அமர்த்தப் பட்டவர் –

நீதிக் கட்சியின் அன்றைய உறுப்பினர்களுள் ஒருவரான எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்களால் பாராட்டப்பட்டு, தமிழ்ப் பணிக்கான செப்புப் பட்டயம் பெற்றவர் –

சென்னைப் பல்கலைக் கழகத்தின், சென்னை மாகாணக் கலைச் சொல்லாக்கக் குழுவின் உறுப்பினர் –

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் –

தமிழறிஞர் பேராசிரியர், வழக்கறிஞர், மொழி பெயர்ப்பாளர், சிறந்த சொற்பொழிவாளர், சைவசித்தாந்தச் சிந்தையாளர், தமிழ், ஆங்கிலம், மலையாளம், வடமொழி ஆகிய மொழிகளில் தேர்ந்த பன்மொழிப்புலவர் என்ற பெருமைகளுக்கு உரியவர் கா.சு.பிள்ளை என்று அழைக்கப்படும் பேராசிரியர் கா.சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்.

இவரின் சொந்த ஊர் திருநெல்வேலி.

இவரின் தாயார் மீனாட்சியம்மையார், தந்தை காந்திமதிநாதப் பிள்ளை.

இந்த இணையரின் நான்காம் மகனாக 1888ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5ஆம் நாளில் பிறந்தவர் கா.சு.பிள்ளை.

இவரின் தொடக்கக் கல்வி திண்ணையில் தொடக்கியது.

1906ஆம் ஆண்டு மெட்ரிகுலேசன் தேர்வில் சென்னை மாகாணத்தில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

1908ஆம் ஆண்டில், சென்னை மாகாணக் (மாநிலக்) கல்லூரியில் ‘கலை உறுப்பினர்’ (Fellow of Arts) தேர்வில் வெற்றிபெற்றார்.

தொடர்ந்து மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய புலவர் தேர்வில் முதல் மாணவராகத் தேறினார்.

இதன் பெருட்டு ஆங்கிலேயரால் உருவாக்கப் பட்ட ‘பவர் மூர்கெட்’ என்ற விருதைப் பெற்றார்.

1910ஆம் ஆண்டில் வரலாறு சிறப்புப் பாடத்தில் இளங்கலைப் பட்டமும்,

1913ஆம் ஆண்டில் ஆங்கில இலக்கியம்,

1914ஆம் ஆண்டில் தமிழ் இலக்கியம் ஆகியனவற்றில் முதுகலைப் பட்டங்களையும் பெற்றார்.

1917இல் சென்னை சட்டக் கல்லூரியில் சட்டமுதுகலைப் பட்டம் பெற்றார்.

1919ஆம் ஆண்டு நீதிபதி சேசகிரியின் உதவியால் இவர் சட்டக்கல்லூரி விதிவுரையாளர் ஆனார்.

அந்தக் காலத்தில், கல்கத்தாவில் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் பெயரில் அமைந்த விருதைப் பெறவேண்டும் என்றால், தேர்ந்த சட்டத் தலைப்பு ஒன்றில் பன்னிரண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்த வேண்டும் என்று ஒரு விதி இருந்தது.

பேராசிரியர் கா.சு.பிள்ளை அவர்கள், கல்கத்தா சென்று ‘குற்றங்களின் நெறி முறைகள்’ என்ற தலைப்பில் பன்னிரண்டு சொற்பொருக்காற்றி தாகூர் விருதைப் பெற்றுத் திரும்பினார்.

இவ்விருது பெற்ற ஒரே தமிழர் இவர் மட்டும்தான்.

நீதிக் கட்சித் தலைவர் சர் பிட்டி. தியாகராயர் பரிந்துரையால் சென்னை சட்டக்கல்லூரிப் பேராசிரியராக இருந்த கா.சு.பிள்ளை அவர்கள், அப்பல்கைக் கழகத்தில் உருவாக்கப் பட்ட சில விதிமுறைகள் காரணமாக 1927ஆம் ஆண்டு பதவியை இழந்தார்.

1929–1930ஆம் ஆண்டு, 1940–1941ஆம் ஆண்டு, 1943–1944ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவர் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இங்கேதான் நாவலர் இரா.நெடுஞ்செழியன், பேராசிரியர் க.அன்பழகன் இருவரும் பேராசிரியர் கா.சு.பிள்ளையிடம் மாணவர்களாகப் பயின்றனர்.

தமிழ்மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் தமிழ் இலக்கண–இலக்கியம், வரலாறு, சைவ இலக்கியங்களைப் படித்து அவைகளை ஆய்வு செய்யத் தொடங்கினார், பல நூல்கள் எழுதினார்.

திருநெல்வேலியில் 1934ஆம் ஆண்டு, முதல் முதலாகச் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டிற்காகக் கடுமையாக உழைத்த பேராசிரியர் கா.சு.பிள்ளை, மாநாட்டின் வரவேற்புக் குழு உறுப்பினராக இருந்தார்.

அம்மாநாட்டில் எடுக்கப் பெற்ற முடிவின்படி, அதே ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் ‘சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்’ என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார்.

அதன் தலைவராகப் பொறுப்பேற்று 1938ஆம் ஆண்டுவரை நான்கு ஆண்டுகள்



திறம்படச் செயலாற்றி இருக்கிறார் கா.சு.பிள்ளை.

‘மணிமாலை’ என்ற பெயரில் சொந்தமாக மாத இதழ் நடத்தியிருக்கிறார்.

திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்ட புகழ்பெற்ற ‘செந்தமிழ்ச் செல்வி’ என்ற மாத இதழில் இவர் கட்டுரைகள் எழுதி இருக்கிறார்.

என்னதான் வைச சித்தாந்தச் சிந்தனையாளராக இருந்தாலும், திராவிட இயக்கக் கருத்துகளின் தாக்கம் இவரை விட்டு வைக்கவில்லை.

இவர் தன் கட்டுரைகள் மூலம் சாதி மறுப்புத் திருமணங்களை வரவேற்றார். கைம் பெண்களின் மறுமணம் வேண்டும் என்றார். பெண் விடுதலை தேவை என்று சொன்ன இவர், பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு வேண்டும் என்றும் குரல் எழுப்பினார்.

தமிழ்நாட்டில் தமிழே கட்டாயப் பயிற்றுமொழி ஆகவேண்டும், கோயில்களில் தமிழ் வழிபாட்டுமொழி ஆகவேண்டும் என்று எழுதினார்.

“காலப் போக்கில் தமிழைப் புதிய கலைக்கண் கொண்டு ஆராய வேண்டும். இல்லை என்றால் உலகில் தமிழனுக்கு இடமே இல்லாமல் போய்விடும். தமிழைப் புதிய முறையில் ஆய்வு செய்தால்தான், நமது பழைய இலக்கண ஆசிரியர்களுடைய பெருமையும், அவர்களின் நுட்பமும் புலப்படும்” என்றார் கா.சு.பிள்ளை.

இப்பெருமகனாரின் நினைவாகத் திராவிட இயக்கத் தலைவர்களுள் ஒருவரான மீ.சு.இளமுருக பொற்செல்வி கரூர் மாவட்டம், குளித்தலையில் கா.சு.பிள்ளை நினைவு இலக்கியக் குழு ஒன்றை அமைத்துப் பெருமைப் படுத்தியிருக்கிறார்.

6 ஆங்கில நூல்கள், 60 தமிழ் நூல்கள் எழுதி இருக்கிறார்.

“கோயில்களில், மடங்களில் முடங்கிக் கிடக்கும் பொருள்களை, ஏழைகளின் கல்வி நலனுக்குச் செலவிட வேண்டும்” என்று சைவ சித்தாந்த வடிவில் இருந்த திராவிடக் கருத்தாளரான –

பேராசிரியர் கா.சு.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், வாதநோயினால் அவதியுற்று 1945ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 30ஆம் நாள் தன் 57ஆம் வயதில் மரணத்தைத் தழுவினார். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.